முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 471/2018

தேதி : 09–10–2025

(வா.சா.1) – திரு.ரமேஷ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. தாவா கடனை எங்கு வைத்து வழங்கப்பட்டது என்றால் எங்கள் ஊரான ஊரநாயக்கன்வலசில் உள்ள என் வீட்டில் வைத்து வழங்கப்பட்டது. எங்கள் ஊர் தாராபுரம் வட்டத்தில் வருகிறது என்றால் சரிதான். பிராதில் ஆயக்குடி கிராமம் எதற்காக போடப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதியின் ஊர் என்பதால் போட்டுள்ளேன். தாவா கடன் மற்றும் புரோநோட் எழுதப்பட்டது அனைத்தும் என் ஊரில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரிதான். இறந்த குமாரசாமி கடன் பெறுவதற்காக என் ஊருக்கு வந்தாரா என்றால் ஆமாம். அவர் கடன் வாங்கப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் அவருக்கு வயது என்ன என்றால் சுமார் 60 இருக்கும். எந்த ஆண்டில் கொடுக்கப்பட்டது என்றால் 2014. அப்போது என் வயது என்ன என்றால் சுமார் 40 இருக்கும். என் வீட்டிற்கும் அவரின் வீட்டிற்கும் சுமார் 40 கி.மீ இருக்கும் என்றால் இருக்கும். எப்படி பழக்கம் என்றால் முன்பு சிறு தொகையை கைமாற்றாக வாங்குவார் அதன்மூலம் பழக்கம். தாவா கடன் எப்போது வாங்கினார் என்றால் 30.09.2014 நேரம் சரியாக ஞாபகமில்லை. எப்போது இறந்தார் என்றால் தேதி தெரியாது. கடன் வாங்கியதிலிருந்து 3 மாதத்தில் 12 மாதம் இறந்தார்.

2. இறந்த குமாரசாமி இறப்பிற்கு முன்பு 2 ஆண்டுகள் படுத்த படுக்கையாக இருந்தார் என்றும், நான் சொல்வதுபோல் நான் சொன்ன தேதியில் அவர் என்னிடம் வாங்கியதாக சொல்லப்படுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. இறந்த குமாரசாமியின் தந்தை என்ன என்றால் தெரியாது. அவரின் போன் நம்பர் என்ன என்றால் தெரியாது. உண்மையில் நான் அவருக்கு ரூ. 5 லட்சம் கடன் கொடுத்திருந்தால் அவரின் போன் நம்பரை வைத்திருப்பேன் என்றும், அப்படி கொடுக்காததால் என்னிடம் அவர் நம்பர் இல்லை என்றால் சரியல்ல. தாராபுரத்தை

சார்ந்த சி.கே.செல்வராஜ்க்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் ஆமாம், அவரை எனக்கு தெரியாது. மேற்படி செல்வராஜ் குமாரசாமியின் நிலத்திற்கு அருகே உள்ள நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. குமாரசாமி இறப்பிற்கு பின் அவருடைய நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா புரோநோட்டை நானும் மேற்படி செல்வராஜ்ம் மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. குமாரசாமி மேற்படி செல்வராஜ்க்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு மறு நாளே அதை ரத்து செய்ததால் அதை மனதில் வைத்து கொண்டு தாவா புரோநோட் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் பவர் பத்திரத்தை பற்றி எனக்கு தெரியாது, தாவா புரோநோட் உற்பத்தி செய்யவில்லை. புரோநோட்டை குமாரசாமி எழுதிக்கொண்டு வந்தாரா என்றால் இல்லை, அவர் அழைத்து வந்த சின்னத்துரை என்பவர் எழுதினார்.

3. சின்னத்துரை எந்த ஊரை சார்ந்தவர் என்றால் மூலனூர் பக்கம் சரியாக தெரியவில்லை. என் ஊருக்கும் மூலனூருக்கும் எத்தனை கி.மீ என்றால் 4 கி.மீ. குமாரசாமி ஊருக்கும் சின்னத்துரை ஊருக்கும் சுமார் 40 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். சின்னத்துரை நான் ஏற்பாடு செய்த நபர் என்றும், நான் சொல்வது போல் குமாரசாமி அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையொப்பம் குமாரசாமியுடையது அல்ல என்றும் அதை நாங்களே போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வருமான வரி தாக்கல் செய்யும் பழக்கம் உள்ளதா என்நறால் உள்ளது. தாவா கடனை அதில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு காண்பிக்கவில்லை, ஆனால் கடன்கள் என்ற விபரத்தில் சொல்லியுள்ளேன். உண்மையில் குமாரசாமிக்கு கடன் கொடுத்திருந்தால் அதை குறிப்பிட்டு காண்பித்திருப்பேன் என்றும், அதை நிதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. குமாரசாமியின் நிறம் என்ன என்றால் மாநிறம், ஆனால் அவரின் ஒரு கண் மட்டும் வெள்ளையாக இருக்கும். அவருக்கு எந்த கண்ணில் அப்படி உள்ளது என்றால் தெரியாது. அவருக்கு கண் பார்வை உண்டா என்றால் உண்டு.

4. அவருக்கு ஒரு கண்ணில் பார்வை இல்லை என்றும், உண்மையில் அவரை எனக்கு தெரிந்திருந்தால் அந்த விபரத்தை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. அவர் குள்ளமா அல்லது உயரமா என்ன என்றால் அளவாக இருப்பார். அவர்

என்னுடைய உயரமா என்றால் தெரியாது. உண்மையில் அவரை பார்த்திருந்தால் அவரின் உயரத்தை பற்றி சொல்லியிருப்பேன் என்றும், பார்க்காததால் அதைப ற்றி சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் முன் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. புரோநோட்டில் உள்ள கையெழுத்தின் உண்மை தன்மை அறிய அறிவியல் ஆய்விற்கு அனுப்ப சம்மதமா என்றால் சம்மதம். இறக்கும் தருவாயில் இருந்த குமாரசாமி 40 கி.மீ தூரத்தில் உள்ள என் வீட்டிற்கு வந்து கடன் வாங்கியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

5. தாவா கடனை வாங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடன் கொடுப்பதற்கு வசதியுள்ளது என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் கடன் வாங்கிய விபரத்தை அவரின் வாரிசுகளுக்கு தெரிவிக்கவில்லை என்றால் அறிவிப்பு மூலம் தெரிவிக்கவில்லை, நேரடியாக போய் தெரிவித்தேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

(3ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்)

ஒம்./–K.ரேணுகாதேவி
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.